# பிறிஸ்பேன் தமிழ்ப்பாடசாலை இணை
## Brisbane Tamil School Inc.

PO Box 1041
Mt Ommaney QLD 4074

Email: admin@btsqld.org
Web: www.brisbanetamilschool.org

**Brisbane Campus**
Holland Park State High School
Bapaume Road, Holland Park

**Gold Coast Campus**
Southport State High School
Smith Street, Gold Coast

**Toowoomba Campus**
Darling Heights State School
Wuth Street, Darling Heights

**Brisbane Northside Campus**
Earnshaw State College, Cnr of
Earnshaw and Tufnell Rd, Banyo


*பேச்சு - மத்தியபிரிவு 2*

*(01.07.2015க்குப் பின் பிறந்தவர்கள்)*

***Speech - Intermediate division 2 (Born after 01.07.2015)***

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

**ஒழுக்கம் உடைமை**

“ஒழுக்கம் விழுப்பம் தரும்” என்பது பழமொழி. ஒழுக்கமுடையவர்கள் மேன்மையும் புகழும் பெறுவார்கள் என்பது அதன் பொருள். எப்போதும் எமது செயல்களும் சிந்தனைகளும் உயர்ந்தவையாக இருக்க வேண்டும். ஒழுக்கம் உள்ள மனிதரை எல்லோரும் மதிப்பார்கள். அவர்களுக்குச் சமூகத்தில் நல்ல பெயர் இருக்கும்.

நற்பழக்கங்களைக் கற்றுத்தரும் இடம் பாடசாலை அல்லவா? யாருக்கும் உதவி தேவைப்பட்டால் தயக்கமின்றிச் செய்ய வேண்டும். தனியாக யாரையும் ஒதுக்கி வைக்கக் கூடாது. ஆசிரியர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். வகுப்பில் அமைதி காத்து பாடங்களை நடத்த உதவ வேண்டும். நல்ல மாணவனே பின்னாளில் நற்குடிமகன் ஆகின்றான்.

சமூக வாழ்க்கையிலும் நாம் ஒழுக்கத்தைப் பேண வேண்டும். மூத்தோருக்கு உதவும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும் உண்மை பேசுதல், யாரையும் ஏமாற்றாது நடத்தல் என்பன நல்ஒழுக்கங்கள் ஆகும். போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவது, பொது இடங்களை சுத்தமாக வைத்திருப்பது, ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிப்பது ஆகியவை நல்ல குடிமகனின் பண்புகள் ஆகும்.

ஒழுக்கம் என்ற உயர்ந்த நற்பண்பு இருந்தால், செல்வம், பதவி, புகழ் போன்றன வெகுமதியாய் கிடைக்கும்.

**ஒழுக்கத்தைப் பேணுவோம், நல்வழியில் நடந்திடுவோம்**

நன்றி